செ. கு. எண்:078 நாள்: 06.06.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – நாள் 6.6.2017

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த அரசியல்வாதியுமான திரு இரா. செழியன் அவர்கள் உடல் நலக் குறைவின் காரணமாக தனது 94–வது வயதில் இன்று (6.6.2017) காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த மன வேதனையும், துயரமும் அடைந்தேன்.

மறைந்த திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களின் இளைய சகோதரரான இவர் 1962–லிருந்து இருபத்தி இரண்டு ஆண்டுகள் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் சிறப்பாகப் பணியாற்றி தனது தெளிவான, கண்ணியமான உரைகளால் அனைத்து தரப்பினரின் நன்மதிப்பையும், மரியாதையையும் பெற்றவர்.

மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திரு. இரா.செழியன் அவர்களுக்கு 2005–ஆம் ஆண்டு "பெரியார் விருதும்," 2012–ஆண்டில் "பேறறிஞர் அண்ணா விருதும்" வழங்கி கௌரவித்தார்கள். இவர் சமூக நீதிக்காக தொடர்ந்து பாடுபட்டு மக்கள் நலனுக்காக அயராது உழைத்தவர்.

திரு. இரா. செழியன் அவர்களின் மறைவு, தமிழ்நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9